# இயேசு வருவதற்கு முன் மக்கள் தேவனை வணங்கினார்கள்

**ஜெபம் :** "அன்பான கர்த்தாவே, உம்மை உத்தம இருதயத்தோடு தொழுது கொள்ள சிறுவர்களுக்கு உதவுமாறு இந்தப் பாடத்தைப் பயன்படுத்தும்."

பழங்கால இஸ்ரவேல் மக்கள் தங்கள் புதிய ஆலயத்தில் எவ்வாறு தொழுது கொண்டனர் என்பதை **2 நாளாகமம் 5** ல் இருந்து ஒரு பெரிய பிள்ளையோ அல்லது பெரியவரோ வாசிக்கட்டும் அல்லது கூறட்டும்.

பின் இந்தக் கேள்விகளைக் கேட்கவும்.

- எருசலேமில் நடந்த புனித பண்டிகைக்கு சாலொமோன் யாரை அழைத்தான்? *(வச.3)*
- அவர்கள் எதைப் பலியிட்டனர்? *(வச.6)*
- மகா பரிசுத்த ஸ்தலத்தில் கேருபீன்களின் செட்டைக்கு அடியில் இருந்தது என்ன? *(வச.7)*
- உடன்படிக்கைப் பெட்டிக்குள் இருந்தது என்ன? *(வச.10)*



- ஆசாரியர்களும் லேவியர்களும் கர்த்தரை எவ்வாறு துதித்தனர்? *(வச.12,13)*
- ஆசாரியர்கள் கர்த்தரை துதித்தபோது தேவாலயத்தை நிரப்பியது என்ன? *(வச.13)*

இயேசு வந்ததினாலும், தமது பரிசுத்த ஆவியை நமக்குள் வாசம் செய்ய அனுப்பியதாலும், தேவ பிரசன்னம் ஒரு கட்டிடத்தில் இருப்பது இல்லை என்பதையும், எல்லாருடைய இருதயத்திலும் இருக்கிறது என்பதையும் **விளக்கிச் சொல்லவும்.** மிருக பலி இயேசுவையே குறித்தது. இன்று நாம் மிருகங்களை பலியிடுவது இல்லை. ஏனெனில் தேவ ஆட்டுக் குட்டியான இயேசு நமது பாவங்களை எல்லாம் சுமந்து தீர்த்தார்.



## செயல்பாடு

பழங்கால இஸ்ரவேலர் தேவனைத் தொழுது கொண்ட விதங்களை குழந்தைகள் கூறட்டும். இன்று நாம் தேவனை ஆராதிக்கும் முறையோடு ஒப்பிட்டு நோக்குக : உதாரணமாக -

- இஸ்ரவேலருக்கு மரத்தாலும் கல்லாலும் ஆன ஒரு பௌதீக ஆலயம் இருந்தது. ஆனால் இன்று நாம் எங்கு வேண்டுமானாலும் ஆராதிக்கலாம்.
- ஸ்ரவேலரின் உடன்படிக்கை பெட்டி தேவ பிரசன்னத்தை உணர்த்தியது ஆனால் இன்று தேவன் நமக்குள் வாசம் செய்கிறார்.
- இஸ்ரவேலர் மிருகங்களைப் பலியிட்டனர். ஆனால் இன்று நமக்குக் கர்த்தரின் பந்தியில் கிறிஸ்துவின் சரீரம் இருக்கிறது.

- இஸ்ரவேலர் இசையாலும், காணிக்கையாலும் தேவனைத் துதித்தனர். நாமும் இன்று அவற்றை உபயோகிக்கிறோம்.
- இஸ்ரவேலர் விக்கிரகங்களையும், அசுத்த ஆவிகளையும் புறக்கணித்தனர். நாமும் அவ்வாறே செய்கிறோம்.

**நாடகம்**

2 நாளா 5 லிருந்து தேவாலய பிரதிஷ்டையை நாடகமாக்குக :

- சபைத் தலைவருடன் பேசி குழந்தைகள் இந்த நாடகத்தை நடிக்க ஏற்பாடு செய்க
- பெரிய பிள்ளைகள் சிறு குழந்தைகளுக்கு நாடகத்தை ஆயத்தம்செய்ய உதவவும்
- சிறு பிள்ளைகள் **ஆசாரியர்** (நான்கு) **லேவியர்** பாகங்களில் நடிக்கலாம்
- பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள் சாலொமோன், பெண், தேவகுரல், கதை கூறுபவர்,தந்தை பாகங்களை ஏற்கலாம்.

**கதை கூறுபவர் :** 2 நாளாகமத்தில் உள்ள இந்தக் கதையைத் தொகுத்து உரைக்கவும். பின் கூறவேண்டியது, “ஒரு பெண் தன் தந்தையிடம் கேட்பதை கவனியுங்கள்”

**பெண் :** தந்தையின் கரத்தைப் பிடித்து நடந்து கொண்டே, "நாம் இரண்டு நாளாக நடந்து கொண்டே இருக்கிறோம். எங்கே போகிறோம்.?”

**தந்தை :** “சாலொமோன் இராஜா தான் கட்டிய ஆலயத்தின் பிரதிஷ்டைக்காக எல்லா இஸ்ரவேலர்களையும் எருசலேமுக்கு அழைத்துள்ளார்.”

**பெண் :** “பாருங்கள்! தங்கத்தால் மூடிய பெரிய பெட்டி ஒன்றை ஆசாரியர்கள் தூக்கிச் செல்லுகின்றனர்.”

**ஆசாரியர்கள் :** நீண்ட தண்டில், உடன்படிக்கைப் பெட்டியை இரண்டு பேர் முன்னாலும் இரண்டு பேர் பின்னாலுமாக தூக்கிக் செல்வது போல் பாவிக்கவும். பின் அதை கீழே இறக்கி வைப்பது போல நடிக்கவும்.

**தந்தை :** “அது உடன்படிக்கைப் பெட்டி. அதில 10 கட்டளைகள் உண்டு. அதை ஆலயத்தில் உள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைப்பார்கள். அது எல்லாம் வல்ல தேவனின் பிரசன்னத்தை நமக்கு ஞாபகப்படுத்தும்.” (தலை வணங்குதல்).

**பெண் :** “அதை எப்போது அவர்கள் திறப்பார்கள்?”

**தந்தை :** “எப்போதும் திறக்க மாட்டார்கள்! ஒரு தடவை ஒரு மனிதன் அதை தொட்டுவிட்டான். கர்த்தர் அவனை அடித்ததால் இறந்துவிட்டான்.”

**லேவியர்கள் :** ஊர்வலமாகப் போகிறார்கள். கைத்தாளமிட்டு எக்காளம் ஊதுவதுபோல் நடித்தல்.



**பெண் :** “பாருங்கள்! இசைப்பவர்கள் கைத்தாளம், கின்னரம் மத்தாளம், எக்காளம் ஆகியவற்றை வைத்திருக்கிறார்கள்!”

**லேவி :** ஒன்று சேர்ந்து சத்தமாகப் பாடுகிறார்கள், “தேவனைத் துதியுங்கள்! அவர் அன்பும் இரக்கமும் என்றும் உள்ளது.”

**பெண் :** “பாருங்கள்! தேவாலயம் புகையால் சூழப்பட்டு இருப்பதை! ஆசாரியர்கள் அங்கிருந்து போக வேண்டியதுதான்!”

**லேவி :** அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்து, கண்தெரியாதது போல, கைகளை உயர்த்தி, நடந்து போதல்.

**தந்தை :** “தேவ மகிமை தேவாலயத்தை நிறைத்துவிட்டது. பார்! சாலொமோன் இராஜா ஜெபிக்கிறார்.”

**சாலொமோன் :** வானத்தை நோக்கி கைகளை விரித்து, சத்தமாகப் பேசுகிறான், “கர்த்தாவே, இஸ்ரவேலின் தேவனே! நீர் என்றென்றும் வாசமாய் இருப்பதற்கு ஓர் உயர்ந்த வாசஸ்தலத்தைக் கட்டி இருக்கிறேன். ஆனாலும் நீர் இந்த உலகில் மனுபுத்திரனோடு வாசமாய் இருப்பீரோ. வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே. அப்படியானால் நான் கட்டிய இந்த வீடு எம்மாத்திரம்?”

**கதைகூறுபவர் :** தேவனுடைய குரல் வானத்தில் இருந்து பதில் அளிக்கிறது.

**தேவகுரல் :** “என் நாமம் இருக்கட்டும் என எருசலேமைத் தெரிந்து கொண்டேன். என் நாமத்தினாலே அழைக்கப்பட்ட என் ஜனங்கள், தங்களைத் தாழ்த்தி, ஜெபித்து, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், நான் பரலோகத்தில் இருந்து கேட்டு, அவர்கள் பாவங்களை மன்னித்து, அவர்களுடைய தேசத்தைக் குணமாக்குவேன்.”

இந்த நாடகத்தை சிறுவர்கள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், இந்தப் பாடத்தின் முதல் பக்கத்தில் உள்ள கேள்விகளைக் கேட்கலாம்.

படம்: தேவ பிரசன்னத்தை இசையின் மூலமாக எப்படி நாம் கொண்டாடுகிறோம் என்பதை விளக்க சிறுவர்கள் யாழ் அல்லது வேறு ஒரு இசைக் கருவியின் படத்தை வரையலாம். ஆராதனை வேளையின் போது இப்படங்களைக் காட்டி பெரியோருக்கு விளக்கலாம்.



**கவிதை:** ஏசாயா 6:1-4 வசனங்களை மூன்று பிள்ளைகள் ஒவ்வொரு வசனமாகப் பாடட்டும்.

உசியா ராஜா மரித்த வருடத்தில்
உன்னதமான ஸ்தானத்திலே கர்த்தர் வீற்றிருந்த
சிம்மாசனத்தை நான் பார்த்தேன்.
அவரது வஸ்திரம் ஆலயத்தை நிறைத்து நின்றதுவே!
ஆறுசெட்டைகள் கொண்ட சேராபீன்கள்
அவருக்கு மேலாய் நின்றனவே!
ஒருவரை ஒருவர் நோக்கி அவர்கள்
“எல்லாம் வல்ல கர்த்தர்! பரிசுத்தர்!
பரிசுத்தர்! பரிசுத்தர் என்று சொன்னார்கள்
பூமியனைத்தும் அவரது மகிமை நிறைந்தது!
அவர்களின் குரலால் வாசல் நிலைகள் அதிர்ந்தன.
ஆலயம் புகையால் நிரம்பியது.

**சிறுபிள்ளைகள் மனனம் செய்ய வேண்டியது** சங்.87:3. **பெரிய பிள்ளைகள்** எபி.1:1, 2.

**ஜெபம் :** “கர்த்தாவே! சாலொமோன் இராஜாவுக்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் உமது பிரசன்னத்தை, வெளிப்படுத்தியதற்காக உமக்கு நன்றி சொல்லுகிறோம்”. இப்போது இயேசுவின் நிமித்தம் எங்கள் ஒவ்வொரு வருக்குள்ளும் வாசமாய் இரும். நாங்கள் களிகூர்ந்து உம்மைத் துதிக்கிறோம்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net